## முதல் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

### தமிழ்

வகுப்பு - ஏழு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** 10 × 1 = 10

1. வாழை, கன்றை ______________
   அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது
2. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது ______________
   இ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம் இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம்
3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________
   அ) வான்ஒலி ஆ) வானொலி இ) வாவொலி ஈ) வானெலி
4. யாதெனின் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________
   அ) யா + எனின் ஆ) யாது + தெனின் இ) யா + தெனின் ஈ) யாது + எனின்
5. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ______________
   அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி
6. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ______________
   அ) பச்சைஇலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ) செங்காய்
7. முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் ______________
   அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி
8. ஆசிய யானைகளில் ஆண் - பெண் யானைகளை வேறுபடுத்துவது ______________
   அ) காது ஆ) தந்தம் இ) கண் ஈ) கால்நகம்
9. நெறி என்னும் சொல்லின் பொருள் ______________
   அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்
10. வாய்மை எனப்படுவது ______________
    அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்
    இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்

**II. பொருத்துக:** 4 × 1 = 4

11. பொக்கிஷம் - அலங்காரம்
12. சாஸ்தி - செல்வம்
13. விஸ்தாரம் - மிகுதி
14. சிங்காரம் - பெரும்பரப்பு

III. **மனப்பாடப் பாடல்:** 6

15. ‘காடு’ பாடலை அடிப்பிறழாமல் எழுதுக.

IV. **கடிதம்:** 5

16. சுற்றுலாவில் கலந்து கொள்ள ஒப்புதலும், பணமும் கேட்டு தந்தைக்கு கடிதம் எழுதுக.

V. **ஊர்பெயர்களின் மரூஉச் சொற்களை கண்டறிக:** 5 × 1 = 5

17. புதுச்சேரி
18. கோயம்புத்தூர்
19. திருநெல்வேலி
20. திருச்சிராப்பள்ளி
21. அம்பாசமுத்திரம்

VI. **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:** 5 × 2 = 10

22. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
23. காடு - வரையறு.
24. வாழும் நெறி யாது?
25. வழக்கு என்றால் என்ன?
26. மகரக்குறுக்கதிற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
27. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.

VII. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** 3 × 3 = 9

28. தம் மகன் குறித்துத் தாய் எதனை உவமையாகக் குறிப்பிடுகிறார்?
29. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
30. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?
31. பாஞ்சாலங்குறிச்சியின் வீடுகள் எவ்வாறு இருக்கும்?

VIII. **கீழ்க்காணும் ஒவ்வொரு வாக்கியத்தின் பொருளை கண்டுபிடிக்கவும். ஒவ்வொரு சொல்லும் எதுகை மோனையுடன் இருக்க வேண்டும்.** 6 × 1 = 6

32. தாழ்த்திப் பேசுவது
33. தறி நெசவை சார்ந்தது
34. நீதியை நிலை நாட்ட
35. பூ காய்கறி விளைவது
36. ஒரு ரூபாய் நாணயம்
37. பொதுவில் கூடுவது

IX. **கலைச்சொல் தருக:** 5 × 1 = 5

38. Sacrifice
39. Unity
40. Equality
41. Slogan
42. Elocution